# தமிழ்நாடு அரசு

# இந்து சமய அறநிலையத் துறை

## உதவி ஆணையர் அலுவலகம், தூத்துக்குடி

## வேலைவாய்ப்பு விளம்பரம் அறிவிப்பு

ந.க.எண்.2202/2016/அ2 நாள் : 21.02.2024

தூத்துக்குடி இந்து சமய அறநிலையத்துறை, உதவி ஆணையர் அலுவலகத்தில் காலியாக உள்ள கீழ்கண்ட பணியிடங்களை நிரப்பிட தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

கீழே கொடுக்கப்பட்டுள்ள இட ஒதுக்கீடு, கல்வித்தகுதி மற்றும் வயது வரம்பிற்குட்பட்ட **இந்து சமயத்தைச் சார்ந்தவர்கள் மட்டும்** விண்ணப்பிக்க வேண்டும். தகுதியுள்ள விண்ணப்பதாரருக்கு நேர்முகத் தேர்வு நடைபெறும். பணி நியமனம் முற்றிலும் தற்காலிகமானது.

| வ.எண். | பணியிடம் | எண்ணிக்கை | ஊதிய விகிதம் | தகுதிகள் |
|---|---|---|---|---|
| 1. | ஓட்டுநர் | 1 (ஒன்று) | 19500-62000 (Level 8) | 1. 8ம் வகுப்பு தேர்ச்சி 2. LMV License with Batch 3.நல்ல உடல் தகுதியுடன் இருக்க வேண்டும். |
| 2. | அலுவலக உதவியாளர் | 4 (நான்கு) | 15700-50000 (Level 1) | 1. 8ம் வகுப்பு தேர்ச்சி |

**இன சுழற்சி ஒதுக்கீடு முறை :**

1. **ஓட்டுநர் பணியிடத்திற்கு** ஆதிதிராவிடர் அருந்ததியர் ஆதரவற்ற விதவை.
2. **அலுவலக உதவியாளர் - நான்கு பணியிடங்கள்**

   1. ஒரு அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கு பொதுப்போட்டி - முன்னுரிமை பெற்றவர்

**முன்னுரிமை**

(கொரோனா தொற்றால் பெற்றோரை இழந்த இளைஞர்கள்,

தனியார் மற்றும் அரசால் நடத்தப்படும் அனாதை இல்லங்களில் தங்கி பயின்று வளர்ந்து வரும் தாயையும் தந்தையையும் இழந்த வாரிசுதாரர்கள் (அவ்வில்லங்களில் பெறப்படும் சான்றிதழின் அடிப்படையிலும்),

அங்கீகரிக்கப்பட்ட ஆதரவற்றோர் இல்லங்களில் சேர முடியாத கிராமப்புற தாய் தந்தையற்ற நபர்கள் (வருவாய் வட்டாட்சியர் மூலம் பெறப்படும் சான்றிதழ்)

2. ஒரு அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கு ஆதிதிராவிடர் அருந்ததியர் ஆதரவற்ற விதவை முன்னுரிமை பெற்றவர்.
3. ஒரு அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கு மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் - முன்னுரிமை பெற்றவர். (முதல் தலைமுறை பட்டதாரி)
4. ஒரு அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கு முன்னுரிமை பின்தங்கிய வகுப்பினர் (பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முஸ்லீம் தவிர) (தமிழ் வழியில் பயின்றவர்கள்)

| 01.01.2024-ல் வயது வரம்பு | SC, ST, SC(A) | GT | MBC, DNC | BC |
|---|---|---|---|---|
| அதிகபட்ச வயது | 37 | 32 | 34 | 34 |
| குறைந்தபட்ச வயது | 18 | 18 | 18 | 18 |

*அரசு விதிகளின்படி வயது வரம்பு தளர்வு அனுமதிக்கப்படும்.

மேற்கூறிய தகுதியுள்ள **"இந்து சமயத்தைச் சார்ந்தவர்கள் மட்டும்" 20.03.2024 மாலை 5.30 மணிக்குள்** கீழ்காணும் ஆவணங்களின் நகல்களில் சான்றிட்டும், புகைப்படத்துடன் சுயவிலாசமிட்ட ரூ.25/-க்கான தபால் தலை ஒட்டிய உறை ஒன்றுடன் கீழ்கண்ட முகவரிக்கு உரிய விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து விண்ணப்பிக்க வேண்டும். இருப்பிட முகவரி, அஞ்சல் குறியீட்டு எண், கைபேசி எண் ஆகியவற்றை தெளிவாகவும், அலுவலக உதவியாளர் பதவிக்கு விண்ணப்பம் செய்பவர் விண்ணப்ப உறையில் **"அலுவலக உதவியாளர்" பணியிடம்** என்றும், ஓட்டுநர் பணியிடத்திற்கு **"ஓட்டுநர்" பணியிடம்** என்றும் குறிப்பிட்டு அனுப்பப்பட வேண்டும். குறிப்பிட்ட தேதிக்குள் வரப்பெறாத விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

**இணைத்து அனுப்ப வேண்டிய விபரங்கள்**

1. விண்ணப்பதாரர் பெயர் மற்றும் முகவரி (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்)

1. விண்ணப்பதாரர் பெயர் மற்றும் முகவரி (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்)
2. எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றதற்கான/பெறாததற்கான கல்வி சான்று நகல்
3. ஓட்டுநர் உரிமம் 4. பள்ளி மாற்று சான்று நகல்
5. சாதி சான்று நகல் (வட்டாட்சியரால் வழங்கப்பட்டது)
6. தூத்துக்குடி வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்த பதிவு எண், பதிவு சான்றின் நகல்
7. குடும்ப அடையாள அட்டை நகல்
8. இன சுழற்சி முறைக்கு உரிய சான்றின் நகல் (Community Certificate)
9. இதர தகுதிகள் ஏதுமிருப்பின் அதன் விபரம் மற்றும் நகல்கள்
10. சுயவிலாசமிட்டு ரூ.25/-க்கான தபால் தலை ஒட்டிய உறை.

**குறிப்பு :**

விண்ணப்ப படிவத்தினை உதவி ஆணையர் அலுவலக விளம்பர பலகை மற்றும் TNHRCE website - ல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:**

**உதவி ஆணையர்,இந்து சமய அறநிலையத்துறை,**
**அழகேசபுரம், மெயின் ரோடு, தூத்துக்குடி-628 001**

(ஒம்.) **தி.சங்கர்**
**உதவி ஆணையர்**
**இந்து சமய அறநிலையத்துறை**
தூத்துக்குடி

வெ.ஆ.எண் : 40/செமதொஅ -தூடி /2024 நாள் : 22.02.2024

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

C24022326